4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) டெல்டா மாவட்டங்களுக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து காவேரி நீர் பெற நடவடிக்கை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015-2016 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்களுக்கான (குறுக்கீடு) என்ன? நான் அடுத்த அலுவலுக்குள்ளே போகிறேன். திரு. ரெங்கராஜன், உங்களுக்கெல்லாம் வாய்ப்பு கொடுத்துவிட்டேன். திரும்பத் திரும்ப எழுந்து நிற்பது சரியில்லை. வாய்ப்பு இல்லை, இன்றைக்கு கில்லட்டின் நாள். இன்றைக்கெல்லாம் இப்படி, திரும்பத் திரும்ப எழுந்து நிற்பது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. இன்றைக்கு கில்லட்டின் நாள். இன்றைக்கெல்லாம் இப்படி, திரும்பத் திரும்ப எழுந்து நிற்பது முறையில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன டாக்டர் கிருஷ்ணசாமி? இதெல்லாம் முறையில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதில் சொல்லுங்கள், பதில் சொல்லுங்கள் என்று . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் பேசிக்கொண்டிருக்கும்போது, நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்களே?*

பிற்பகல் 12-35

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *கொஞ்சம் பொறுங்கள். பதில் சொல்லுங்கள், பதில் சொல்லுங்கள் என்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கேட்பதுதான் விநோதமாக, வியப்பாக இருக்கிறது. காவேரி பிரச்சினையில், காவேரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு 2007-ல் வழங்கப்பட்டது. அதனை உறுதிப்படுத்துவதற்கு, அதனை மத்திய அரசினுடைய அரசிதழில் வெளியிட வேண்டும். அப்பொழுதுதான் அது முழுமைப் பெறுகின்ற நிலை ஏற்படும். அப்போது காங்கிரஸ் தலைமையிலான அரசுதான் மத்திய ஆட்சியில் இருந்தது. அவர்களோடு தி.மு.க.-கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அங்கே அமைச்சர்களாக மத்தியில் ஆட்சியில் இருந்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் தமிழகத்தினுடைய முதலமைச்சராக*

2015 செப்டம்பர் 29] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வரும் வரை அந்தத் தீர்ப்புக்கு மத்திய அரசின் அரசிதழில் இடம்பெறச் செய்ய காங்கிரசாலும் முடியவில்லை, தி.மு.க.-வினாலும் முடியவில்லை. இதுதான் உண்மை நிலை. அதற்குப் பின்னால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்தப் பிரச்சினையை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று வழக்குகள் போட்டு வாதாடி, போராடி அதற்கு சட்டப்பூர்வமான அங்கீகாரம் கிடைக்கின்ற வகையில் மத்திய அரசினுடைய அரசிதழில் வெளியிடச் செய்த பெருமை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி டெல்டா பாசனப் பகுதி மட்டுமல்லாமல் தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை விவசாயிகளின் உயிர்நாடியாக விளங்கிக்கொண்டிருப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். காவேரியில் உரிய நீரைப் பெறுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உரிய நடவடிக்கையினை உறுதியாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே பதிலாக உங்களுக்குத் தருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். கவலை வேண்டாம். மகிழ்ச்சியோடு இருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் ஒன்றும் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் அனுமதி இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதெல்லாம் எதுவும் பதிவாகாது. உங்களுக்கு நான் அனுமதி அளிக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி இன்றைக்கு கில்லட்டின் செய்தாக வேண்டும். எனக்கு நேரம் இல்லை. (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் அவைக் குறிப்பில் வராது. உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் வாய்ப்பு இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இதையெல்லாம் எனது அறையில் வந்து கேளுங்கள். இப்படியெல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடு) இப்படிப் பேசினீர்கள் என்று சொன்னால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) நீங்கள் எனக்கு ஒத்துழைக்காமல் பிடிவாதமாகப் பேசுவது முறையில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, கோபப்படவில்லை. (குறுக்கீடு) அவரிடம் எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறார். இதுபோல் திரும்பத் திரும்ப சொல்வது முறையில்லை. (குறுக்கீடு) இதுபோல் செய்வது

முறையில்லை. (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தொடர்ந்து இந்த அவைக்கு ஒவ்வாத செயல்களைச் செய்வதால் கிருஷ்ணசாமி அவர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமியை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். காவலர்கள் அவரை வெளியேற்றுங்கள். (குறுக்கீடு) காவலர்கள் அவரை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) காவலர்களுக்கு தொல்லை கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) காவலர்களோடு ஒத்துழைத்து வெளியில் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) காவலர்களை தொல்லை செய்யாதீர்கள். (குறுக்கீடு)

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஒரு பதாகையினை உயர்த்திக் காட்டினார்)

அதையெல்லாம் காண்பிப்பது அவைக்கு ஒவ்வாத காரியம். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமியை வன்மையாகக் கண்டிக்கிறேன். அவரை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

(புதிய தமிழகக் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

6. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2015–2016, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2015–2016 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்களுக்கான முதல் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015–2016 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இ